**பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,**

**காரைக்கால் & இந்திய வானிலைத்துறை**

**காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(11.04.2026 முதல் 15.04.2026 வரை)**

**தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182**

**E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260**

அறிக்கை எண்: 029 (04) PJN/GKMS/2026 தேதி:10-04.2026

**காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்த வார வானிலை (05.04.2026 முதல் 09.04.2026 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 15.04.2026 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **05/04** | **06/04** | **07/04** | **08/04** | **09/04** | | **நாள்-1 11/04** | **நாள்-2 12/04** | **நாள்-3 13/04** | **நாள்-4 14/04** | **நாள்-5 15/04** |
| 0 | 1.5 | 0.5 | 0 | 0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 5 |
| 38 | 38 | 37 | 37 | 36 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 35 | 35 | 36 | 36 | 36 |
| 26 | 24 | 26 | 27 | 24 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 26 | 26 | 27 | 27 | 27 |
| 2 | 4 | 3 | 5 | 3 | மேக மூட்டம் | 6 | 6 | 5 | 5 | 5 |
| 67-87 | 60-93 | 65-92 | 59-94 | 65-92 | ஈரப்பதம் (%) | 85-90 | 85-90 | 75-80 | 75-80 | 75-80 |
| 5 | 5 | 3 | 5 | 5 | காற்றின் திசை | 4 | 4 | 4 | 4 | 4 |
| வடக்கு வட மேற்கு | வடக்கு வட மேற்கு | வட மேற்கு | தெற்கு தென் மேற்கு | தெற்கு தென் மேற்கு | | தென் கிழக்கு | தென் கிழக்கு | தெற்கு தென் கிழக்கு | தெற்கு தென் கிழக்கு | தெற்கு தென் கிழக்கு |

**எதிர்பார்க்கப்படும் வானிலை (11.04.2026 முதல் 15.04.2026 வரை):**

ஏப்ரல் 15ஆம் தேதி லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்பநிலை 26-36 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 75-90 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 04 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் தெற்கு தென் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

ஏப்ரல் 15 முதல் 21 வரை மழை (0.2 மிமீ) இயல்பை விட குறைவாகவும் அதேசமயம், குறைந்தபட்ச வெப்பநிலை (24.6°C) மற்றும் அதிகபட்ச வெப்பநிலை (36.6°C) இயல்பாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## வேளாண் அறிவுரை

| **பயிர்கள் / கால் நடைகள்** | **பருவம்/ விவரங்கள்** | **வேளாண் ஆலோசனைகள்** |
|---|---|---|
| உளுந்து | பூக்கும் தருணம் | சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த, வேப்பங்கொட்டை சாறு 5% (அ) வேப்ப எண்ணெய் 3% (அ) யூக்கலிப்டஸ் இலை கரைசலை நோயின் அறிகுறி தோன்றியவுடன் ஒரு முறையும், அதனைத் தொடர்ந்து 10 நாட்கள் இடைவெளியில் மீண்டும் ஒரு முறை தெளிக்கவும் (அ)<br>கார்பெண்டாசிம் 50 WP @ 500 கிராம்/ஹெக்டேர் (அ)<br>கரையும் கந்தகத்தூள் 80 WP @ 1500 கிராம்/ஹெக்டேர் (அ)<br>புரோபிகோணசோல் 25% EC @ 500 மி.லி/ஹெக்டேர் |
| | | இலை சுருள்வு நோயை கட்டுப்படுத்த நோயினால் தாக்கப்பட்ட செடிகளை 45 நாட்களுக்குள் களைந்தெடுத்தல்.<br>விதைத்த 30 நாட்களில் 10% நோச்சி இலை கரைசல் (அ)<br>3 % வெப்ப எண்ணெய் கரைசலை தெளிக்கவும். தேவையானால், அதனைத் தொடர்ந்து 15 நாட்கள் இடைவெளியில் மீண்டும் ஒரு முறை தெளிக்கவும். (அ) |

| | | |
|---|---|---|
| | | மீதைல் டெமட்டான் 25 EC @ 500 மில்லி/ஹெக்டேர் (அ)<br>டைமேத்தோயேட் 30 EC @ 500 மி.லி/ஹெக்டேர் என்ற அளவில் தெளிக்கவும். |
| | | உளுந்து மற்றும் பச்சை பயிரில் ஏற்படும் மஞ்சள் தேமல் நோயை பரப்பும் வெள்ளை ஈ மற்றும் அஸ்வினியை கட்டுப்படுத்த மீதைல் டெமட்டான் 25% EC லிட்டருக்கு1 மி.லி. அல்லது டைமீதோயேட் லிட்டருக்கு 30% EC 1 மி.லி. என்ற அளவில் பயன்படுத்தலாம். |
| | | நெற் தரிசு உளுந்து மற்றும் பச்சை பயிருக்கு 2% DAP கரைசலை அதாவது ஏக்கருக்கு 4 1/2 கிலோ DAPயை 10 லிட்டர் தண்ணீரில் முதல் நாள் இரவு ஊறவைத்து பிறகு அடுத்த நாள் தெளிந்த நீரை 190 லிட்டர் தண்ணீருடன் கலந்து பூக்கும் தருணத்தில் ஒரு முறையும் 15 நாட்கள் கழித்து மறு முறையும் காலை அல்லது மாலை வேளையில் கைத்தெளிப்பான் கொண்டு இலைகள் நன்கு நனையும்படி தெளிக்கவும். |
| பருத்தி | வளர்ச்சி பருவம் | பருத்தியில் களையைக் கட்டுப்படுத்த ஹெக்டருக்கு பயிரிதியோபக் சோடியம் (pyrithiobac sodium) 62.5 கிராம் a.i. + குயிசலோபாப் ஈதைல் (quizalofop ethyl) 50 கிராம் a.i களைக்கொல்லிகளை விதைத்த 20-25வது நாட்களில் பயன்படுத்தவும். |
| | விதைத்தல் | நெல் தரிசு நார் பயிரான பருத்தி MCU 7 அல்லது SVPR 3 போன்ற ரகங்களின் பஞ்சு நீக்கிய விதைகளை ஹெக்டேருக்கு 7.5 கிலோ என்ற அளவில் விதைக்கவும். |
| கத்தரி | காய்க்கும் பருவம் | கத்தரியில் இலைப்புள்ளி மற்றும் பழம் அழுகல் நோயைக் கட்டுப்படுத்த சூடோமோனாஸ் ஃபுளோரசன்ஸ் (Pseudomonas fluorescens) அல்லது பேசில்லஸ் சப்டிலிஸ் (Bacillus Subtilis) ஒரு லிட்டர் நீரில் 5 கிராம் அல்லது 5 மி.லி கலந்த கரைசலை உடனடியாக தெளிக்க வேண்டும். |
| ஆடு | அம்மை நோய் | வெயில் காலத்தில் ஆடுகளுக்கு அம்மை நோய் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. எனவே ஆடு வளர்ப்போர் தங்கள் ஆடுகளுக்கு அம்மை நோய் வரமால் தடுக்க வெயில் காலத்திற்கு முன்பாகவே அம்மை தடுப்பூசி போட வேண்டும். |

**குறுஞ்செய்தி:** ஏப்ரல் 15ஆம் தேதி லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

முதல்வர்